தமிழ்ச் சிட்டு



குரல் : 20
இசை : 11

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை :
உருபா : 1-00

தெரிந்து கொள்ளுங்கள்!

○ சென்னை மாநகரம் என்பது ஏறத்தாழ 174 சதுர அயிர மாத்திரி (கி.மீ) கொண்ட இடமாகும். இதில் 42 இலக்கத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்.

○ இந்தியாவில் இதுவரை (1950 சனவரி 26-இல் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து) ஏறத்தாழ 80 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி பல்வேறு மாநிலங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றுள்ளது.

○ பசிபிக் மாகடலில் உள்ள குடியரசு உரிமை பெற்ற நாடு பிசி (Fiji) தீவாகும். இது 800 தீவுகளைக் கொண்ட ஒரு தீவுக் கூட்ட நாடாகும். இதன் தலை நகர் 'சுவா' எனப்பெறும் தீவாகும். இங்கு ஏறத்தாழ 50,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் பெரும்பாலார்க்குத் தமிழ்மொழி தெரியாது.

○ வெங்காயத்தைப் பச்சையாகக் காலையும் மாலையும் ஓரளவு முறையாக உண்டு வந்தால் குருதி அழுத்தமே வராது. குருதி அழுத்தம் உள்ளவர்கள் அவ்வாறு செய்து வந்தால் குருதி அழுத்தம் குறைந்து அல்லது நீங்கி, உடலில் குருதியோட்டம் சீராக அமைவதுடன் குருதியும் தூய்மையுறும்.

○ வீட்டில் எறும்புகள் நிறைய இருந்தால், அது குடிகொண்டிருக்கும் தரை விரிசல், தொளை இவற்றுள் சிறிது மஞ்சள் பொடியை தூவினால் அவை அனைத்தும் வெளியேறிவிடும்.

○ இந்திரா கட்சியில் உள்ள கருப்பையா (மூப்பனார்) அவர்களுக்கு ஏறத்தாழ 4000 குறுக்கம் (ஏக்கர்) நிலம் உள்ளது. இந்த நிலங்களைப் பலரின் பெயர்களில் உரிமைப் படுத்தி வைத்துள்ளார் என்று தெரிகிறது.

○ புதுமுறை வேளாண்மை, கப்பல் கட்டும் தொழில், நிலத்திலிருந்து எண்ணெய் எடுத்தல், இசை, பதின்(தசம)முறைக் கணக்கு, தாள், தாள்பணம், குடை, தூண்டில், சக்கரவண்டி, வெடிமருந்து, தகரி (பீரங்கி), நீரடிச் சுரங்கங்கள், நச்சுவளி, இறங்குகுடை (பாராசூட்), வெப்பக்காற்றுப் பூதிகள் (பலூன்கள்), இறக்கை கட்டிப் பறத்தல், பிராந்தி, விசுக்கி, சதுரங்க ஆட்டம், அச்சுமுறை அச்சு இயந்திரம், அச்செழுத்துகள் நீராவி இழுபொறி, (எஞ்சின்) அடிப்படை வடிவமைப்பு ஆகிய அனைத்துமே கண்டு பிடிக்கப் பெற்றது சீனாவில்தான் என்றால் வியப்பாக இருக்கிறது இல்லையா?

அவை மட்டுமல்ல, கப்பலின் சுக்கான்கள், திசை காட்டி, பன்முகப் பாய்மரங்கள் போலும் கப்பல் போக்கு வரத்துக்கான கருவிகளும் சீனாவிலிருந்துதான் ஐரோப்பாவுக்கு இறக்குமதியாயின. இவை வந்திராவிடில் ஐரோப்பாவின் நாடாய்வுக் கடற்பயணங்களை ஒரு போதும் மேற்கொண்டிருக்க முடியாது. கொலம்பசும் அமெரிக்காவைக் கண்டு பிடித்திருக்க முடியாது. ஐரோப்பியர்களும் குடியேற்ற ஆளுமைப் பேரரசுகளை உருவாக்கியிருக்க முடியாது.

மேலும் குதிரைச் சேணத்தைக் கண்டுபிடித்தவர்களும் சீனர்கள்தாம். அவை மட்டுமில்லை, இயந்திரக் கடிகாரம், எரிவளி (Gas) உடலின் அரத்த ஓட்டம், பொருள்களின் இயக்க நெறி, பல வானியல், கோளியல் உண்மைகள், வார்ப்பு இரும்பு (எஃகு), தொலை நோக்கி, நிலக்கரி முதலிய உலக அறிவியல் முன்னேற்றத்துக்கான அனைத்துப் பொருள்களுமே சீனர்கள் கண்டிபிடித்தவை தாம்.

— அடிப்படை 'கூரியர்' திசம் '88

ஆசிரியவுரை:

தமிழ்ச்சிட்டு

குரல் : 20] (தி.பி-2021) மீனம் (பிப்-மார்ச் 90') [இசை-11

விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா!

இவ் வாண்டு பிப்ரவரி மாதம் 21-ஆம் பக்கல் உலகின் விடுதலை வரலாற்றில் மிகவும் முகாமையான ஒரு நாளாகும். அன்றுதான் தென்னாப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா, அங்கிருக்கும் கேப்டவுன் அருகிலுள்ள விக்டர் வெர்சுடர் சிறையிலிருந்து, 27 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப் பெற்றார். அவரது 46-ஆம் அகவையில் 1962-ஆம் ஆண்டு சிறையிலடைக்கப் பெற்ற அவர் இப்பொழுதுதான் விடுதலை செய்யப் பெற்றுள்ளார். ஓர் இனத்தின் விடுதலைக்காக உலக வரலாற்றில் மிக நீண்ட காலம் சிறை சென்ற மாபெரும் வீரர் மண்டேலாதாம்!

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் ஒரு சிறுபான்மை இனமாக இருந்து, பெரும்பான்மை இனமான கருப்பு இனத்தவர்களான—நீக்ரோ இனத்தை அவ் வெள்ளையர் இனம் அடக்கி, ஒடுக்கி, ஆண்டு வருகிறது. அந் நிற வெறி அரசாட்சிக்கு எதிராக, நீக்ரோ இனத்திற்கு உரிமைகள் கேட்டுக் கருவிப் புரட்சியை உண்டாக்கியதால், மண்டேலா சிறைப்படுத்தப் பெற்றார்: அவர், இன விடுதலை கோரும் 'ஆப்பிரிக்க தேசியப் பேராயத்தின்' (காங்கிரசின்) முன்னணித் தலைவர்.

சட்டத்திற்கு எதிராக நாட்டை விட்டு வெளியேறிக் கருப்பின மக்களைச் சட்டத்தை மீறும் படியும், வேலை நிறுத்தம் செய்து, அரசுடன் போராடும்படியும், தூண்டிவிட்டதாக தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு அவர்மேல் குற்றஞ்சாட்டி, 1961-ஆம் ஆண்டு அவருக்குக் கடின உழைப்புத் தண்டனையை ஐந்தாண்டுகளுக்குக் கொடுத்தது. பின்னர் 1962-ஆம் ஆண்டு, தென்னாப்பிரிக்க அரசைக் கருவி தாங்கிய கொரில்லாப் போராட்டம் மூலம் வீழ்த்த சூழ்ச்சி (சதி) செய்ததாக அவர் மேல் குற்றஞ்சாட்டி வழக்குப் போட்டது. வழக்கு அவருக்கு எதிரான தீர்ப்பைத் தந்தது. எனவே அவருக்கு 1964-இல் வாணாள் சிறைத் தண்டனை தந்தது.

பின்னர் அவர் இயக்கத்தையும் தடை செய்து, அவர் இயக்கத்தைச் சார்ந்த பன்னூற்றுக்கணக்கானவர்களைச் சிறைப் படுத்தியும், கொடுமைப் படுத்தியும், கொன்று குவித்தும் அவ் விடுதலை உணர்வையே நசுக்கி வந்தது. இந்த அடாவடி அடக்கு முறைக் கொடுமைகளையும் இன அழிப்பையும் அமெரிக்க, உருசிய, பிரிட்டானிய, சீன வல்லரசுகள் உட்படப் பெரும்பாலான நாடுகள் கண்டித்தன; மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தன. ஆனால் உலக நாடுகளின் கோரிக்கைகளுக்குத் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு செவி சாய்க்கவே இல்லை; தேர்தலில் ஒப்போலை இடும் உரிமை முத-

லாகப் பல வாழ்வியல் உரிமைகளையும், கருப்பு இனத்தவரான நீக்ரோ இனமக்களுக்குத் தராமல், மேலும் மேலும் அவ் வெள்ளையராட்சி அம் மக்களை அடக்கியும் ஒடுக்கியும் கொடுமை-களுக்கு ஆளாக்கியுமே வந்தது.

மண்டேலாவிற்கும் அவர் நண்பர்களுக்கும் வாணாள் சிறை (ஆயுள் தண்டனை) கொடுக்கப் படுவதற்கு முன், கேப்டவுன் அரு-கில், மிகவும் தீவிரமான பாதுகாப்புடன் நிறைந்த ரோபன் தீவில் சிறையில் வைக்கப் பெற்றிருந்தார். அப்பொழுது, சோகன்சுபர்க் அருகில் இருந்த 'ஆப்பிரிக்கத் தேசியப் பேராயத்தின் (காங்கிர-சின்)' தலைமையகத்தை வெள்ளை நிறக் காவலர்கள் கண்டு பிடித்து, அங்கிருந்த மண்டேலாவின் நாட்குறிப்புச் சுவடியையும், கொரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக அவர் எழுதி வைத்திருந்த திட்ட வரைவுகளையும், பிற போராட்ட ஆவணங்-களையும் கைப்பற்றினர். அதன் பின்னர்தாம் ஏற்கனவே சிறையில் வைக்கப் பெற்றிருந்து, பல கொடுமைகளுக்கும் ஆளான மண்டேலாவிற்கும் அவருடைய நண்பர்களுக்கும் வாழ்நாள் சிறைத் தண்டனை கொடுக்கப் பட்டது.

மிகவும் வலிவான கட்டுக் காவலுடன், அவர் ரோபன் தீவுச் சிறையிலிருந்த பொழுது, மண்டேலா பல வகையான மனவியல், அறிவியல், உடலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அக்கால் அவருக்கு மிகவும் தரக் குறைவான உணவு தரப் பெற்றது. அவர் படிப்பதற்காக எந்த ஒரு நூலையோ செய்தியிதழ்களையோ கூட அவருக்குக் கொடுக்கவில்லை, மிகவும் கடினமான, அவரால் செய்வதற்கு முடியாத வேலைகளைச் சிறையதிகாரிகள் அவருக்குக் கொடுத்தனர். கல் உடைப்பது, கடலில் மூழ்கிக் கடற்பாசிகளை எடுப்பது, போன்ற உயிர் கொடுமைப் பணிகளையெல்லாம் அவ-ருக்குக் கொடுத்ததுடன் அவற்றை அவர் செய்ய முடியாமல் துன்-பப்பட்ட பொழுதெல்லாம் அவரைச் சிறைக் காவலர்கள் மிகவும் துன்புறுத்தவும் செய்தனர்.

அக் கொடிய அரசு அதிகாரிகள் இவர்க்குத் தொல்லை தந்த-டன் நில்லாமல் வெளியிலிருந்த அவர் குடும்பத்திற்கும் மிகுந்த தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்து வந்தனர். அவருடைய மனைவி வின்னிமண்டேலாவையும் அரசு பல காரணங்களுக்-காகச் சிறையிலடைப்பதும் வெளியே விடுவதுமாகத் தொடர்ந்து துன்புறுத்தி வந்தது. அவர் மனைவி சில காலம் வெளியே நடமாடுதற்கும் கூட தடை விதிக்கப்பட்டது. மண்டேலா இதுபற்றிக் குறிப்பிடுகையில், தமக்கு இழக்கப் பட்ட கொடுமைகளை விட, தம் மனைவி வின்னிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் துன்பங்களுந்தான் மிகுதி என்றும், அவற்றால் தான் தாம் மிகவும் கவலைப் படுவதாகவும் கூறினார்.

அவரும் அவர் நண்பர்களும் சிறைவைக்கப் பெற்ற 22 ஆண்டு-களுக்குப் பின்னர்தான், அஃதாவது 1982 ஏப்ரல் மாதந்தான் மண்டேலாவும் அவரின் முகாமையான 5 நண்பர்களும் கேப்டவுன் அருகிலுள்ள போல்சுமூர் சிறைக்கு மாற்றப்பட்டனர். அதன்

பின்னர்தான் அவர் தம் மனைவி மக்களைப் பார்க்கவும் பேசவும் இசைவளிக்கப் பெற்றார். அதுவும், அவர்களுடன் மாதத்திற்கு ஒரு முறை 40 நிமைய நேரம் மட்டுமே அவர் பேசுவதற்கு இசைவளித்தனர். மடல்கள் வழியாகக் கூட அவர் குடும்பத்தினருடன் பேசவும் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் கட்டுப்பாடு செய்யப்பட்டது. மாதம் ஒரு மடல்தான் அவர் எழுதலாம். அதுவும் 500 சொற்கள் மட்டுமே எழுதலாம். கடிதத்திலும் கூட குடும்பத் தொடர்பான செய்திகளைத் தவிர வேறு எதுபற்றியும் எழுதக் கூடாதெனக் கடுமையாக எச்சரிக்கப்பட்டும் கண்காணிக்கப் பட்டும் வந்தார், மண்டேலா.

மண்டேலா 1964-ஆம் ஆண்டு சிறையிலிருந்து அவருக்கு அளிக்கப்பட்ட வாணாள் சிறைத்தீர்ப்பை மறுத்து, அரசுக்கு ஓர் அறிக்கையை எழுதியனுப்பினார். அதில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"அரசுக்கு எதிரான அழிவு வேலைகளில் ஈடுபடத் திட்டமிட்டதை நான் மறுக்கவில்லை. ஆனால், அடாவடித்தனமாகவோ வன்முறை மீதுள்ள பற்றுதல் காரணமாகவோ இதை நான் செய்யவில்லை. பல ஆண்டுக்காலக் கொடுங்கோன்மை, சுரண்டல், வெள்ளையர்கள் எம் இன மக்களை ஒடுக்குவது ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளைப் பற்றி அமைதியாகவும், பொறுப்புடனும் ஆராய்ந்து பார்த்ததன் விளைவாகத்தான் இம் முயற்சிகளை நான் மேற்கொண்டேன்"

"அனைத்து மக்களும் ஒற்றுமையாகவும் சமவாய்ப்புகளுடனும் வாழக்கூடிய ஒரு மக்கள் நாயக, உரிமைக் குமுகாயத்திற்கான கொள்கை நோக்கை நான் பெரிதாக மதிக்கிறேன். தேவைப்பட்டால் என் உயிரையும் அளிக்க அணியமாக இருக்கக் கூடிய கொள்கையும் இதுவே"

மண்டேலாவின் முழுப்பெயர் நெல்சன் ரோபிகலா மண்டேலா என்பது.

மிக நீண்ட காலம்-தொடர்ச்சியாக 27 ஆண்டுகள் இன விடுதலைக்காக உலகிலேயே வீரத்துடன் தாம் கொண்ட கொள்கையில் இம்மியும் விட்டுக் கொடுக்காமல் சிறையிலிருந்து வரலாற்றைப் படைத்த வீர விடுதலை மறவன் நெல்சன் மண்டேலா 1918-ஆம் ஆண்டு சூலை மாதம் 18-ஆம் பக்கல், தென்னாப்பிரிக்காவில் பிரான்சுகோப் என்னும் இடத்தில் குனு என்னும் சிற்றூரில் ஒரு மண் குடிசையில் பிறந்தார். அவருடைய தந்தை சோரா மண்டேலா நீக்ரோ பழங்குடி மக்கள் தலைவர் ஆவார்.

மண்டேலா இளம் அகவையில் மிகவும் ஏழ்மை நிலையில் படிக்க வேண்டியிருந்தது. ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டே படிக்க வேண்டியிருந்தது. இளமையிலேயே மண்டேலா போர்புரியும் கலையையும் விரும்பிப் பயின்றார். மிகச் சிறந்த குத்துச்

சண்டை வீரர் அவர். இளம் அகவையில் 'மெத்தடிசுட்' கிறித்துவ சமயப் பள்ளியில் படித்த அவர் பின்னர் சோகன்சுபர்க் சென்று கருப்பர்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்றில் படித்தார். பின்னர் சட்டக் கல்வியும் படித்துத் தேறினார். அவர் மாணவராக இருக்கும் பொழுதே மாணவர்களின் போராட்டங்களை முன்னின்று நடத்தினார். அதற்காக ஒரு முறை அவர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றவும் பட்டார்.

அதன் பின்னர் அவர் பல வேலைகளைச் செய்து வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. தொடக்கத்தில் அவர் ஒரு தங்கச் சுரங்கத்தில் காவலராகவும், பின்னர் வழக்கறிஞர் ஒருவர்க்கு எழுத்தராகவும், அதன் பின் நிலம் வாங்கி விற்கும் முகவராகவும் இருந்து தொல்லைப் பட்டார். பின்னர் முழு இன விடுதலை முயற்சி-களில் ஈடுபட்டு, ஆப்பிரிக்க தேசியப் பேராயம் (Africa National Congress) என்னும் கட்சியைத் தோற்றுவித்து அதன் கொள்கை-களைக் கருப்பர்களிடத்தில் பரப்பி அவர்களை எழுச்சி கொள்ளச் செய்தார்.

அவர் பணியாற்றிக் கொண்டிருக்கும்பொழுதே எவ்லின்-மசே என்னும் மருத்துவ செவிலிப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும், பிறந்தன. இவர்களுள் ஒரு பெண் குழந்தையும் ஓர் ஆண் குழந்தையும் இறந்தன. இவ-ருடைய மனைவி இவரின் பொது வாழ்க்கைக்கு ஒத்து இயங்காமல் முரண்பாடாக நடந்து கொண்டதால், அவர்கள் இருவரும் 1955-ஆம் ஆண்டிலேயே மணவிலக்குச் செய்து கொண்டனர். பின்-னர் அவர் ஒரு வழக்கில் குற்றஞ் சாட்டப் பட்டு, வழக்கு நடந்து கொண்டிருக்கும் பொழுதே தம் இரண்டாம் திருமணமாக வின்னி-என்ற பெண்ணை மணந்து கொண்டார். வின்னிக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. அவர் இரண்டாம் மனைவி வின்னி தம் கணவருடன் போராட்ட நிலையில் பலவகை துன்பங்-களுக்கும் ஆளாகி உள்ள உரத்துடன் அவருக்குத் துணையாக இருந்து வருகிறார்.

கேப்டவுனிலுள்ள போல்சுமூர் சிறையில் வைக்கப்பட்டு அவ்வரை அரசு மிகவும் துன்பப்படுத்தியபொழுது, மண்டேலா-வுக்கு ஈளை நோய் (காச நோய்) பிடித்துத் தொல்லைப்பட்டார். இந்த நோய் நீங்கிய பின் 1988 திசம்பரில் பார்ல் வட்டாரத்தில் உள்ள சிறைப்பண்ணை வீடு ஒன்றில் அவர் வீட்டுச் சிறை வைக்கப் பட்டார். அங்கு அவர் குடும்பத்தினரும் நண்பர்களும் அடிக்கடி சென்று பார்த்து வந்தனர்.

தென்னாப்பிரிக்காவில் முன்னிருந்த அதிபர்கள் எல்லாரும் மண்டேலாவை விடுதலை செய்ய ஒப்பவில்லை. உலகமே கேட்டுக் கொண்டும்கூட அவர்கள் விடாப்பிடியாக அவரைச் சிறையில் வைத்திருந்தனர். பல நாடுகளின் அரசுகள் அதனால் தென்னாப்பிரிக்காவின் மீது சினமுற்றுப் பல வகையான பொருளி-யல் தொடர்புகளையும் தூதரகத் தொடர்களையும் அறுத்துக்

கொண்டன. அப்பொழுதும் தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு அவரை விடுவிக்கவில்லை.

வன்முறையைக் கைவிடுவதாக உறுதி அளித்தாலோ கருப்பர்களின் தாயகம் ஒன்றில் அவர் ஒதுங்கி வாழ முன் வந்தாலோ அவரை விடுதலை செய்வதாகத் தென்னாப்பிரிக்க அரசு பலமுறை கூறியது. ஆனால் மண்டேலா இக் கட்டுப்பாடுகளையெல்லாம் ஒப்புக் கொள்ளாமல், தாம் இறுதிவரை கொள்கையை விட்டுக் கொடுக்காமல் சிறையிலேயே இருந்தார்.

இறுதியாக 1989-ஆகத்து மாத அளவில், தென்னாப்பிரிக்க ஆட்சித் தலைவராக எப்.டபிள்யூ. டி.கிளார்க் என்பவர் வந்தார். கிளார்க் மண்டேலாவின் நீண்ட காலச் சிறை வாழ்க்கையை இரக்கத்துடன் கண்ணேக்கினார். அவர் மண்டேலாவை 1989 திசம்பர் மாதம் 13-ஆம் பக்கல் சிறையில் சந்தித்தார். அவரும் சில கட்டுப்பாடுகள் பற்றி மண்டேலாவிடம் பேசினார். ஆனால், மண்டேலா எவ்வகைக் கட்டுப்பாட்டுடனும் தாம் விடுதலையாக விரும்பாதவராய், ''அரசு முதலில் தம் இனத்தின் மேல் செலுத்தும் வன்முறையைக் கைவிட வேண்டும்; இன ஒதுக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; தமது இயக்கமான ஆப்பிரிக்க தேசியப் பேராயத்தின் மீதான தடையை நீக்க வேண்டும்'' என்று கோரினார்.

அதன் பினனர் 1990 பிப்ரவரி 2-இல் கேப்டவுனில் ஆட்சித் தலைவர் டி.கிளார்க், ''ஆப்பிரிக்க தேசியப் பேராயக் கட்சியின் மீதான தடை நீக்கப் படுகிறது: அதையடுத்து நெல்சன் மண்டேலா எவ்வகைக் கட்டுப்பாடும் இன்றி விரைவில் விடுதலை செய்யப் பெறுவார்'; என்று கூறினார்.

அதுபோலவே பிப்ரவரி 11 மாலை 4 மணியளவில் இந்திய நேரம் 7-30 மணிக்கு, 27 ஆண்டுகளாகச் சிறை வைக்கப் பெற்றுத் தம் வாழ்வின் இளமைப் பருவம் முழுவதும் இழந்து போய், 71 அகவைக் கிழவராக விடுதலை செய்யப் பெற்றார்.

வெளியில் வந்த பின் அவர் தாம் சிறையிலிருந்தது பற்றிக் கூறுகையில், ''நீண்ட, தனிமையான, வீணான ஆண்டுகள்'' என்று கூறினார். அதேபொழுது உலக நாடுகளுக்கு ஒரு வேண்டுகோளையும் முன் வைத்தார்.

''தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுக்கு எதிரான பொருளியல் தடைகளை நீக்க வேண்டாம். இன வேறுபாடற்ற குடிநாயகக் குமுகாயம் ஒன்று தென்னாப்பிரிக்காவில் ஏற்படுவதற்கான தங்கள் கட்சியின் முயற்சிக்கு இது இன்றியமையாதது'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை மாவீரன் மண்டேலாவின் கால்கள் மீண்டும் தன் இன மக்களின் விடுதலையை நோக்கி நடைபோடத் தொடங்கியுள்ளன. அவரின் முயற்சிகள் பயனளிக்கும் காலம் மிகத் தொலைவில் இல்லை. அவரின் விடுதலையை அனைத்துலக நாடுகளும், அந் நாடுகளில் உள்ள எல்லாத் தரத்து மக்களும் வாழ்த்தி வரவேற்றுக் கொண்டுள்ளனர். ○

வல்லினம் மிகுதலும், மிகாமையும்!

(16) நான்காம் வேற்றுமை விரியில் வலி மிகும்.

'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபு. 'கு' உருபு வெளிப்பட நிற்பது நான்காம் வேற்றுமை விரி.

குழந்தைக்குக் கொடு என்னும் தொடரில் குழந்தை என்னும் பெயரோடு சேர்ந்து நிற்கும் 'கு' உருபின் பின் 'கொடு' என்னும் வருமொழி நோக்கி, வல்லெழுத்து மிகுந்துள்ளது.

(எ-டு) பாம்புக்குப் பகை காலுக்குச் செருப்பு
மாட்டுக்குத் தீனி கடைக்குப் போ.

(17) அஃறிணை நான்கும் வேற்றுமைத் தொகையிலும் வல்லெழுத்து மிகும்.

'சூர்க்குப் பகை' என்பதைச் 'சூர்ப்பகை' என்று தொகையாகக் கூறுகிறோம். இதிலும் வல்லினம் மிகுகிறது.

(எ-டு) கடிப்பகை, மாட்டுத் தீனி.

(18) உயர்திணை நான்காம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

'நம்பிக்குத் தம்பி' என்னும் தொடர் 'நம்பி தம்பி' எனத் தொகையாக நிற்கிறது. இது நான்காம் வேற்றுமைத் தொகை.

தம்பி முதலிய முறைப் பெயர்களெல்லாம் நான்காம் வேற்றுமையாகும். ஆறும் வேற்றுமையாகக் கொள்ளக் கூடாது.

நம்பி என்பது உயர்திணை ஆண்பாற் பெயர்.

எனவே, இதுபோலும் வரும் வேற்றுமைத் தொகையில் எல்லாம் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) பொன்னி கணவன் அத்தை பிள்ளை
வள்ளி கேள்வன் நங்கை கொழுநன்

(19) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வலி மிகாது.

முதியோர்க்குப் பயிற்றுவிக்கப் பெறும் கல்வி என்பதே முதியோர் கல்வி எனப் பெறுகின்றது.

'முதியோர் கல்வி' என்னும் தொடரில், 'கு' உருபும், 'பயிற்றுவிக்கப் பெறும்' என்னும் பொருட் பயனும் சேர்ந்து மறைந்துள்ளன.

(20) ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகளாகிய இருந்து, நின்று என்பவற்றின் பின் வலி மிகாது.

இருந்து, நின்று என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள்.

'மேனின்று சுரக்கும்' என்னும் தொடர் ஐந்தாம் வேற்றுமை விரி.

'சுரக்கும்' என்னும் வருமொழி நோக்கி, 'மேனின்று' என்பதன் பின் வல்லெழுத்து மிகவில்லை.

(எ-டு) வில்லிருந்து புறப்பட்டது;
மரத்தினின்று குதித்தான்.
நீரிலிருந்து கரையேறினன்;
பாறையினின்று சரிந்தான்

(21) ஆறும் வேற்றுமை விரியில், அது, அ—என்னும் உருபுகளின் பின்னும், உடைய என்னும் சொல்லுருபின் பின்னும் வல்லெழுத்துகள் மிகா.

அது, அ என்பன ஆறும் வேற்றுமை உருபுகள்;

ஆறும் வேற்றுமை உடைமைப்பொருள் ஒருமையாயின் 'அது' என்றும், பன்மையாயின் 'அ' என்றும், வழங்கி வந்தது;

'அ' என்னும் பன்மையுருபு இக் காலத்தில் வழக்குக் குன்றியுள்ளது.

'அது' என்னும் உருபுடைய சொற்கள்: (ஒருமை)

எனது துமுக்கி. (துப்பாக்கி)
அவனது பார்வை.
நமது கணிப் பொறி.
உனது சட்டை.

'அ' என்னும் உருபையுடைய சொற்கள்: (பன்மை)

என கண்கள்
நின சுவடிகள்
எம தூவல்கள் (பேனாக்கள்)
தம பாடல்கள்.

(22) உயர்திணை ஆறும் வேற்றுமைத் தொகையின்கண் வல்லெழுத்து மிகாது.

'புலவரது தொழில்' என்று விரித்துச் சொல்லப் பெற வேண்டியது 'புலவர் தொழில்' என்று தொகையாகவும் சொல்லப் பெறும்.

'அது' என்னும் ஆறும் வேற்றுமை உருபு இதில் மறைந்து நிற்பதால், 'புலவர் தொழில்' என்பது ஆறும் வேற்றுமைத் தொகை.

புலவர் என்பது உயர்திணை. எனவே, இதிலும் இது போல் வருகின்ற தொடர்களிலும் வல்லெழுத்து மிகுவதில்லை;

(எ-டு) நம்பி பொத்தகம்; ஐயனர் கோயில்;
காளி கோட்டம்; கண்ணகி கை.

(23) அஃறிணை ஆறும் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

'அது' என்னும் ஆறும் வேற்றுமை உருபு அஃறிணை உயிர்களுடன் தொடர்பு கொண்டு வரும்;

'கிளியது சிறகு', 'ஆட்டினது கால்' என்று விரிவாகச் சொல்வதையே 'கிளிச் சிறகு', 'ஆட்டுக் கால்' என்று சுருக்கிச் சொல்கிறோம்.

இவை தொடரிலும் 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வருகிறது. எனவே அவை தொகையாகும்.

கிளி, ஆடு என்பன அஃறிணை. எனவே. அஃறிணை ஆறாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகுகிறது.

(எ-டு) யானைக் கொம்பு தேர்த்தட்டு
நரிப் பல் அத்திக் கிளை.

(24) ஏழாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

'குடிக்கண்' அல்லது 'குடியின்கண் பிறந்தார்' என்னும் விரிவான தொடர் 'குடிப்பிறந்தார்' எனத் தொகையாக உள்ளது.

'கண்' என்பது இடப் பொருளை உணர்த்தும் ஏழாம் வேற்றுமை உருபு. ('இன்' என்பது சாரியை-அஃதாவது சொல்லமைப்புக்காக வரும் ஓர் ஒட்டு.)

கால், தலை, இடை, கடை, முகம், வாய் முதலியனவும் ஏழாம் வேற்றுமை உருபுகளே. அவையும் இடப் பொருளையே உணர்த்துவன.

ஏழாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்பது ஏழாம் வேற்றுமைத் தொகை.

(எ-டு) மனைப் புகுந்தார். வலைப் பட்டார்.
குடிப் பிறந்தார். (மடி) மடிக்கொண்டு.

(25) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லெழுத்து மிகும்.

'கூண்டில் வாழும் கிளி' என்பதன் தொகை நிலைத் தொடரே 'கூண்டுக்கிளி' என்பது.

'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபும், 'வாழும்' என்னும் பொருட் பயனும் சேர்ந்து மறைந்து 'கூண்டுக் கிளி' என நிற்பதால், இஃது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும்.

'கூண்டு' என்பதன் பின் 'கிளி' என்னும் வருமொழி நோக்கி வல்லெழுத்து மிகுந்துள்ளது.

(எ-டு) மனைக் கிணறு மலைப் பாம்பு
நீர்க் கோழி அரைக் கச்சு.
வேர்க் கடலை

(26) விளியேற்ற பெயர்களின் பின் வல்லெழுத்து மிகாது.

'தமிழா' என்பது போல ஒருவரை நாம் அழைக்கும் நிலையில் அவர் பெயரைக் குறிப்பிட்டு அழைப்பது விளித்தல் எனப்படும். (விளித்தல்—அழைத்தல்.) இ'து எட்டாம் வேற்றுமை!

விளியேற்ற பெயர் 'தமிழன்' என்பது போல இயல்பாகவும் இருக்கலாம். அல்லது தமிழ, தமிழா, தமிழனே, தமிழாவோ

என்றவாறு மாற்றங்களைப் பெற்றும் வரலாம்.

இவ்வாறு விளியேற்ற பெயர்களின் பின் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) வளவ கேள்! இளங்கோ படி!
தம்பீ போ! குயிலி பாடு!
அம்மா சொல்! தங்காய் கொடு!
குழந்தாய் பார்! வழுதி காட்டு!
பெரியீர் செல்க! இளைஞரீர் காண் மின்!

(27) சுட்டெழுத்துகள், சுட்டுப் பெயர்களின் முன் வல்லெழுத்து மிகும்.

'அ' என்பது தொலைவில் இருப்பதைக் குறிக்கும் சுட்டெழுத்து. அது 'அந்த' என்று வளர்ந்தும் நிற்கிறது. அவ்வாறே 'இ' என்னும் அண்மைச் சுட்டும் 'இந்த' என்று நீண்டுள்ளது.

'உ' என்னும் சுட்டெழுத்து நூல் வழக்கிலேயே காணக் கிடக்கிறது. (ஈழத்தில் பேச்சு வழக்கிலும் உண்டு.)

அங்கு, இங்கு, ஆங்கு, ஈங்கு, ஆண்டு, ஈண்டு என்பன சுட்டுப் பெயர்களாகும். அப்படி, இப்படி என்பனவும், அவ்வகை, இவ்வகை, அத்துணை, இத்துணை என்பனவும் சுட்டுப் பெயர்களாக வழங்கி வருகின்றன.

'அக்கரை' என்பதில் 'கரை' என்னும் வருமொழியை நோக்கி 'அ' என்னும் சுட்டெழுத்தின் முன் வல்லெழுத்து (க்) மிகுந்துள்ளது.

இவ்வாறுன, சுட்டெழுத்துகள், சுட்டுப் பெயர்களின் முன் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) இக் காலம் ஆண்டுக் காண்க!
உப் பக்கம் ஈண்டுக் காட்டுதும்
இந்தப் பையன் அப்படிக் கூறினர்
அங்குக் கண்டேன் இப்படிச் சொல்லலாமா?
இங்குச் சென்றார் அவ்வகைப் பொருள்கள்
ஆங்குத் தெரியும் அத்துணைப் பெருமிதம்
ஈங்குப் போந்தேன் இத்துணைச் சிறப்பு.

(28) அது, இது, அவை, இவை, அன்று, அத்தனை, இத்தனை, அவ்வாறு, இவ்வாறு என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லெழுத்து மிகாது.

'அது' என்பது சுட்டுப் பெயர். சேய்மைச் சுட்டு எனப்படும்; 'இது' அண்மைச் சுட்டு.

'சரி' என்னும் வருமொழியை நோக்கி, 'அது' என்பதன் பின் வல்லெழுத்து மிகவில்லை;

(எ-டு) அது தவறு இது பழச்சாறு
அவை பிழை இவை தூவல்கள்
இன்று பேசேன் அன்று சொன்னார்
அத்தனை கொடிகள் இத்தனை சுவடிகள் (தொடரும்.)

உலக அழிவுக்கு இன்னும் ஆறே ஆறு நிமையங்கள்

சிகாகோ நகரிலுள்ள அணு அறிவியலாளர்கள் கழகம் 1947-இல், ஒரு கடிகாரத்தை உருவாக்கினர். அணுக் கருவிப் போரின் பேரழிவை நோக்கி உலகம் செல்வதற்கு எத்தனை நிமையங்கள் உள்ளன என்பதை அந்தக் கடிகாரத்தின் முள்கள் காட்டுகின்றன. நடைமுறை ஆண்டு, நள்ளிரவுக்கு அஃதாவது 12 மணிக்கு இன்னும் ஆறு நிமையங்கள் இருப்பதாக அது தெரிவிக்கிறது.

அக் கடிகாரம் உருவாக்கப்பட்டதிலிருந்து, இதுகாறும் 12 முறைக்கு மேல் அதன் முள் நகர்த்தப்பட்டுள்ளது. உலகப் பேரழிவு ஏதத்தை (அபாயத்தை) உணர்த்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட அந்தக் கடிகாரத்தின் முள், 1947-இல், நள்ளிரவுக்கு ஏழு நிமையங்கள் காட்டிற்று. 1949-இல் சோவியத்து ஒன்றியம் தனது முதல் அணுகுண்டை வெடித்தபோது, அதன் முள் 4 நிமையங்கள் நகர்த்தப்பட்டு, நள்ளிரவுக்கு 3 நிமையங்களே இருப்பதாகக் காட்டிற்று. 1958-இல் அமெரிக்கா, சோவியத்து ஒன்றியம் ஆகிய இரு நாடுகளுமே நீர்வளிக் (ஐட்ரசன்) குண்டை உருவாக்கியபோதுதான், அந்த முள் நள்ளிரவுக்கு மிக நெருக்கமாக வந்தது.

1963-இல் ஓரளவிலான அணுக் கருவி ஆய்வுத் தடைச் சட்டம் கையெழுத்தான பின்னர், நள்ளிரவுக்கு 12 நிமையங்கள் இருப்பதாக அது நகர்த்தப்பட்டது. ஆனால் 60-ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், பிரான்சு, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகளும் அணு வல்லரசுகளாக மாறியதாலும், வியத்நாம் போரினாலும் அந்த முள் 7 நிமையங்களைக் காட்டிற்று.

1969-இல் அணு போர்ப் பரவல் தடை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, அந்த முள் 10 நிமையங்களையும், சோவியத்துக்கும், அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்ட ''சால்ட்'' ஒப்பந்தத்தையடுத்து 12 நிமையங்களையும் அது காட்டிற்று.

ஆனால் சால்ட்-2 ஒப்பந்தத்தை, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கார்ட்டர் ஏற்றுக் கொள்ள மறுத்ததனால், அந்த முள் மீண்டும் 7 நிமையங்களுக்குத் தள்ளப்பட்டது. 80-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில், ரீகன் ஆட்சியின் போது, அணுக் கருவிப் போரில் வெற்றி பெற முடியும் என்ற கோட்பாடு அறிவிக்கப்பட்ட போதும், விண்மின் (நட்சத்திரப்) போர்த் திட்டத்தையடுத்தும், அந்தக் கடிகார முள் 4 நிமையங்களாயிற்று.

ஐரோப்பாவில், அமெரிக்க பெர்சிங் மற்றும் குரூயிசு ஏவுகணைகளைக் கொண்டு சென்றதும், செனீவாவின் போர்க் கருவிக் கட்டுப்பாட்டுப் பேச்சுரைகள் முறிந்ததும் அதை 3 நிமையங்களாக்க வேண்டியிருந்தது.

பறக்கும் தட்டுகள்!

பறக்கும் தட்டுகளை நேரில் கண்டதைப் பற்றிய ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் உலகத் தாளிகைகளிலும் பொத்தகங்களிலும் விளக்கப் பெற்றுள்ளன. இந்தக் கருவிகளின் பண்புகள் பற்றி மிகவும் சுவையான புலனங்கள் இருந்து வருகின்றன. இந்தக் கருவிகளிலிருந்து ஒளிவீசும் பகுதிகள் பிரிந்து வந்து, தாமதமாகவே அவை நகர்ந்து செல்வதை மக்கள் அடிக்கடி கண்டுள்ளனர். இவற்றின் வேகம் மின்னலைப் போல் இருந்ததாகத் தோன்றுகிறது. நீல வானத்திலிருந்து வெளிப்படுவதற்கும், எந்தச் சமயத்திலும், எந்த இடத்திலும் மறைந்து போவதற்கும் இந்தக் கருவிகளுக்குள்ள ஆற்றல் வியப்பை ஏற்படுத்துகிறது. காற்று மண்டலத்தில் அவை தங்கு தடையின்றி நகர்ந்து செல்லுகின்றன. நிலமும் தண்ணீரும் கூட அவற்றுக்கு எத்தகைய தடங்கல்களும் அல்ல.

நம்புதற்கரிய பெருமளவான செய்திகள் பறக்கும் தட்டுகளுடன் தொடர்பு படுத்திக் கூறப்படுகின்றன. இத்தட்டுகள் தமது

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், 80-ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், கோர்பசேவ் அமெரிக்காவுடன் பற்பல உடன்பாடுகளைக் கண்டதும், உலகில் பதட்டத் தணிவு ஏற்பட்டதும், அந்தக் கடிகார முள்ளை மேலும் பின்னுக்கு நகர்த்த வேண்டியதாயிற்று.

எனினும், இன்று அது 6 நிமையத்தில் நிற்பதேன்? படைத்துறைப் போர் ஏதமும் அணுக் கருவிப் போர் ஏதமும் இன்று பெரிதும் குறைந்துள்ளனவே? அப்படியானால் வேறென்ன அச்சம்?

இருக்கத்தான் செய்கிறது. வான்மண்டல ஓசோன் அடுக்கில் ஓட்டைகள், அதன் விளைவாக உலகின் 'ரேடிய'க் கதிர் வீச்சு ஏதம் அதிகரித்திருப்பது, மற்றும், காடுகள் சிதைக்கப்படுவதும், கரி மற்றும் கன்னெய்(பெட்ரோலிய)ப் பொருள்கள், எரிக்கப்படுவதனால், வளிமண்டலத்தில் ஏற்படும் மாசுகளும், நச்சுப் பொருள்களும் மாந்தக்குலத்தை அச்சுறுத்திக் கொண்டுள்ளன.

அணுக் கருவி ஏதத்தினால் (அபாயத்தினால்) அன்று,—ஆனால், சுற்றுப்புறச் சூழலின் கொடு அழிவு விளைவுகளினாலேயே, அந்தப் பேரழிவு ஏத அறிவிப்பு முள் 6 நிமையங்கள் காட்டிக்கொண்டுள்ளது.

திடீரென ஏற்படும் கொடுஅழிவு விளைவுகள் பற்றி அச்சம் தெரிவித்து, ஆர்ப்பாட்டம் செய்யும் மாந்தகுலம், மெல்ல மெல்லச் சாவினையும் அழிவையும் நோக்கி உலகம் செல்வது குறித்துப் போதுமான அக்கறை காட்டுவதில்லை. இனியும் அவ்வாறிருப்பதில் பயனில்லை. எனவே உலக அழிவுக்கு இன்றைய நிலையிலும் ஆறே ஆறு நிமையங்கள்தாம் இருப்பதாக அக்கடிகார முள் காட்டிக் கொண்டுள்ளது.

ஏ. எசு. எம்,

எண்ணங்களை உய்த்துணர்ந்து கூறுவதாகப் பல சூழல்களில் அவற்றைப் பார்த்தவர்களுக்குத் தோன்றுகிறது. ஒரு பறக்கும் தட்டைச் சிலர் பார்த்த அதே சமயத்தில், அவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்கள் எதையுமே காணாத நிகழ்ச்சிகளும் இருந்துள்ளன.

இந்தப் புதிரை விடுவிப்பது மாந்தனின் ஆற்றலுக்கு அப்பாற் பட்டதாகத் தோன்றுகிறது. ஆயினும், இந்தச் சிக்கலுக்கு நாம் ஓர் ஒப்பீட்டு முறையில் அனைத்துக் கூறுகளுக்குமான அணுகு முறையைப் பயன்படுத்தி, பிற வியப்பூட்டும் காட்சி உண்மைகளுடன் இணைந்த முறையில் இதை ஆராய்ந்து பார்த்தால், புதிராகக் காணப்படும் திரை இதிலிருந்து விலகும். இந்த வழிமுறையைப் பயன்படுத்தியதன் மூலமாகக் கிடைத்துள்ள முடிவுகள், இந்தப் பறக்கும் தட்டுகளைக் காட்டிலும் கூடுதல் கருத்தைக் கவர்வனவாக உள்ளன என்று மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. மேலும் பறக்கும் தட்டுகள், இது வரையிலும் மாந்தக் குலத்திற்குத் தெரியாமலிருந்த ஓர் உலகலாவிய நிகழ்வுப் போக்கின் ஒரு பகுதிதான்—அது வியப்பூட்டும் பகுதியாகவும் இருக்கலாம்—என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

பறக்கும் தட்டுகளின் புதிரை விடுவிப்பதற்கு, முதலில் மாந்தவினத்தின் கடந்த காலத்திலிருந்து கிடைத்த விளக்கங்களை வகைப் படுத்திக் காண்போம்.

பல நூற்றாண்டுகளாக, 'பெரிய வெள்ளி நிற வான்வெளிக் கப்பல்களைப் பற்றிய புனை கதைகள் வட அமெரிக்க இந்தியர்களிடம் உலவி வந்துள்ளன. அவை, குறிப்பிடத் தக்க வகையில் பறக்கும் தட்டுகளைப் பற்றிய வருணனைகளுடன் ஒத்த விளக்கங்களைக் கொண்டுள்ளன.

அந்த இந்தியர்களின் கூற்றுப்படி அந்த வெளியுலகக் கப்பல் கீழ்வருமாறு காணப்படுகிறது. ''வானத்திலிருந்து ஒரு பெருமாண்டமான சக்கரம் நீந்தி வந்தது. அதனுடைய ஓரங்களில் தீப்பிழம்புகள் ஒளி வீசின. அதனுடைய கவசத்தின் மீது விண்மீன்கள் சுடர் விட்டன.'' மற்றொரு விண்மீன் மண்டலத்திலிருந்து வந்த உருவங்கள், தங்களின் சொந்தக் கோளுக்கு அஞ்சத் தகுந்த வேகத்தில் பறந்து செல்ல முடிந்தது. பெரு நாட்டின் சில புனை கதைகள் மாந்தர்கள் வான மண்டலத்திலிருந்து தோன்றியதாகக் கூறுகின்றன. முதலில் மாழையால் (உலோகத்தால்) ஆன முட்டைவடிவக் கருவிகள் வானிலிருந்து தரையில் விழுந்ததாவும், அவை வெடித்து, அவற்றிலிருந்து மாந்தர்கள் வெளிவந்ததாகவும் அவை தெரிவிக்கின்றன.

புனைகதைகளை ஆராய்வதன் வாயிலாக, வானத்தில் வாழும் மாந்தர்களின் நடத்தை பற்றி ஆர்வமூட்டும் முடிவுகளுக்கு ஒருவர் வர முடியும். அவர்களின் பெயர்களைக் கூட அறிய முடியும்.

பல நாடுகளின் பழங்கதைகளில் வேற்று மண்டலக் கப்பல்களைப் பற்றி நிறைய வருணனைகள் உள்ளன. சான்றாக, பண்டைய

இந்திய இலக்கியத்தில், ''ஆகாயத்தில், மற்றும் காற்றில் பறக்கும்தேர்கள்'' பற்றிய வருணனைகள் உள்ளன. பண்டைய திபெத்திய கையெழுத்துச் சுவடிகளிலும் இது காணப்படுகிறது. உரோமாபுரியின் வரலாற்றில், கி.மு.218ஆவது ஆண்டைய பதிவு ஒன்றில், பின்வரும் வாசகம் காணப்படுகிறது. 'பயெத்தா அருகில் வானில் வெண்சுடர் வீசி எரிகிற விளக்குகள் தோன்றின.' ஏப்ரி அருகில் வானில் ஒரு தட்டு வட்டமிட்டது. இத்துடன் இன்னொரு செய்தியையும் பாருங்கள். '22-ஆம் ஆண்டில், குளிர்காலத்தின் மூன்றாவது மாதத்தில், மாலைப்பொழுது 6 மணிக்கு வாழ்க்கை மாளிகையின் எழுத்தர்கள் ஒரு நெருப்பு வளையம் வானிலிருந்து கீழே இறங்குவதைக் கண்டனர்.' இந்தச் செய்தி 3500 ஆண்டுகள் பழமையானது. 3-ஆவது துட்மோசு என்ற பாரவோ மன்னரின் வரலாற்றுக் கதைகளில் இது காணக் கிடக்கின்றது.

நம் முன்னோர்கள் சில சமயங்களில் விண்வெளியில் ஏற்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி நுட்பமான அறிவை வெளிப் படுத்தியுள்ளனர். பல நூற்றாண்டுகளாக, ஆப்பிரிக்காவில் மாலி நிலப்பகுதியில் வாழ்ந்து வரும் தோகோன் மக்கள் வானவெளியிலுள்ள அனைத்து உருப்படிகளையும், விண்மீன்கள், கோள்கள் மற்றும் துணைக்கோள்கள் என்று பிரித்துணர்ந்து வந்துள்ளனர். புடவி எல்லையற்றதென்றும், ஆனால் அதை அளவிட முடியும் என்றும், அதில் மக்கள் வாழ முடியும் என்றும் அறிந்துள்ளனர். 'சிரியசு-பி'-என்பது தான் 'மிகவும் சிறிய ஆனால் மிகவும் கனமான விண்மீன்' என்றும் அறிந்திருந்தனர். சோவியத்து சார்சியாவில் 1564-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் ஆவணத்தின் ஒருபடி இருக்கிறது. அதில் செவ்வாய்க் கோளுக்கு அருகில் மற்றொரு விண்மீன் இருப்பதாகக் கூறி, அதனுடைய சுற்றுப்பாதையும் கூட—24,000 அயிர மாத்திரிகள் (கி.மீ) என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. அந்தக் கணக்கு நடைமுறையில் செவ்வாயின் துணைக்கோள் ஒன்றின் சுற்றுப் பாதையுடன் பொருந்துகிறது.

தொழில் நுட்பத் துறையில் பண்டைய மக்கள் நம்புதற்கரிய அளவுக்கு உயர்வான அறிவைப் பெற்றிருந்தனர்—என்று தெரிகிறது. குறிப்பாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் செர்மன் தொல்லியலாளர் கோய்னிக், பாக்தாதுக்கு அருகில் ஒரு குன்றில் ஒரு பொருளின் மீத மிச்சங்களைக் கண்டு பிடித்தார். அதைப் பின்னர் அவர் ஒரு மின்கலம் (பேட்டரி) என்று உய்த்துணர்த்தினார். அதற்குச் சில காலத்திற்குப் பின்னர், ஓர் அமெரிக்கத் தொல்பொருள் ஆராய்ச்சிப் பயணக் குழு, டைகிரிசு ஆற்றங்கரையில் ஒரு பொருளைக் கண்டு பிடித்தது. அதைக் கொண்டு, சுமெரியா நகை செய்பவர்கள், மின் கரைசல் முறையை அறிந்திருந்தனர் என்று அறிவியல் திறவோர் உய்த்தறிந்து கூறினர்.

காமகூரா என்னும் சப்பானிய நகரில் 13.5 மாத்திரி உயரமுள்ள புத்தர் சிலை ஒன்று உள்ளது. 12-ஆம் நூற்றாண்டில் இது வார்த்தெடுக்கப் பட்டது. ஏழு தனித்தனிப் பாகங்களை ஒன்றாக

இணைத்து இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது: இந்தப் பாகங்களை இணைக்கும் பற்றவைப்பு இணைப்புகளை ஒருவர் தெளிவாகப் பார்க்க முடியும். 12-ஆம் நூற்றாண்டில் மின் பற்ற வைப்பா? மெய்யாகவே அஃது இயலுவதா? பண்டைக் காலத்தவர் இத்தகைய ஒரு தொழில் நுட்பத்தைத் தற்செயலாக உய்த்து அறிந்திருக்க முடியாது.

இந்தப் புதிர்களெல்லாம், முன்னேற்ற மடைந்த மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு நாகரிகத்தின் செயல்களாகத் திறனாய்வு செய்யப்படக் கூடாது. பொதுவான மண்ணுலக வாழ்நர்களாலேயே இந்தப் பணி ஆற்றப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இஃது அணுகத் தக்க வடிவத்தில் அறிவு கைமாற்றி வழங்கப் பட்டுள்ள ஒரு செய்தியேயாகும்.

இவை போன்ற ஏராளமான விளக்கங்களை எடுத்துக் கூற முடியும். இவை யாவும் தொலைவு கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் தனிச் சிறப்பு வாய்ந்த அறிவுக்கும், 'உலகியல்' சார்ந்த விளக்கத்திற்கு உட்படாத காட்சியுண்மைகளுக்கும் ஊழி மாற்றங்களுக்கும் சான்று பகர்கின்றன.

வெவ்வேறு காலங்களில், மலைகளாலும் மா கடல்களாலும் பிரிக்கப் பெற்ற, வெவ்வேறு மக்களின்பால் நம்புதற்கரிய ஒருங்கு நிகழ்வுகளை, வரலாற்றாசிரியர்களும், நிலவியலர்ளர்களும், தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களும், இன மரபியலாளர்களும், மற்றும், ஆய்வுப் பயணத் திறலாளர்கள் பிறரும் கண்டுபிடித்துள்ளனர். சிலர், மாந்த இனத்தினது படிநிலை வளர்ச்சியின் பொது வொழுங்கு நெறிகளைக் கொண்டு, இதற்கு விளக்க மளிக்கின்றனர். வேறு சிலர் கடலோடிகள் இடையில் ஏற்பட்ட தற்செயலான தொடர்புகளை இதற்குக் காரணமாகக் கூறுகின்றனர். இன்னும் பிறர், எடுத்துக்காட்டாக ஏ. அம்போல்ட் அல்லது வி. பிரியுசோவ் முதலியோர் இவற்றின் பொதுவான ஆசான்களைக் கண்டறிய வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர், அவர்கள்தாம் பொதுவான மாந்தவினப் பண்பாடுகளை, எண்கள், மொழிகள், மனைச் சிற்பம் முதலியன உள்ளிட்ட வளர்ச்சிக் கூறுகளை உருவாக்கியிருத்தல் வேண்டும். இது நினைவுக் கெட்டாத மிகு பழங்காலத்தில் ஏற்பட்டிருத்தல் வேண்டும், இதற்குச் சில சான்றுகளை இன்னும் கண்டுபிடிக்க முடியும் என்றாலும், நேரடியான முடிவுறுதிகள் எதனையும் காண முடியவில்லை.

கடந்த காலத்தின் மறைபுதிரான காட்சி உண்மைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துப் பார்த்தால், செய்திகளைப் பெரும் அளவுக்கு நீட்டிப் பாத்தால் கூட, அவர்களால் முற்றிலும் நிலவுலகம் சார்ந்த காரணங்களை வைத்தே—இவையெல்லாம் தற்செயல் ஒருங்கு நிகழ்வுகள் என்று அவற்றை விளக்க முடியும்; ஆயினும், இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால், அவை ஒரு புதிய கருத்தை, அஃதாவது, மண்ணுலகில் வாழும் மக்கள், இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட ஒரு

நாகரிக மக்களால், இடைவிடாது, கண்காணிக்கப் பெறுகின்றனர் என்ற உய்த்துணர்வை(ஊகத்தை)த் தோற்றுவிக்கின்றன.

சென்ற காலங்களில் பறக்கும் தட்டுகளைக் கண்டதாகக் கூறப் படுவது தொடர்பான அனைத்துப் புதிரான செய்திகளும் தொல் பழங்காலத்திய தொடர்புகளாகும். ...கடந்த காலத்தில் மறை புதிர்கள் ஏராளமாக இருந்துள்ளன. அவற்றை மண்ணுலகுக்கு அப்பாற்பட்டவர்களின் உதவி என்னும் ஓர் இயற்கைக் காரண முடிவுகளைக் கொண்டு மட்டுமே விளக்கந்தர முடியும்...

உண்மையில், கடந்த காலத்திலும் அண்மை ஆண்டுகளிலும் காணப்பட்ட சிறிய பறக்கும் தட்டுகளும் பிற விளக்கப்பட முடியாத காட்சியுண்மைகளும் பிற அண்டவெளிக் கப்பல்கள் என்றும், மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட உளவு நடவடிக்கைகளின் வெளிப்பாடுகள் என்றும் ஏன் கருதக் கூடாது? பார்க்கப் போனால், பொதுவாக விண்வெளியிலும், குறிப்பாக நமது பால் மண்டிலத்திலும் உள்ள பல கோள்கள், உயிர் வாழ்க்கையுள்ள எண்ணற்ற உலகங்கள் இருக்கும் என்னும் கருத்துக்கு அடிப்படைகளை வழங்குகின்றன.

மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட உலக வாழ்நர்களின் (!) விண்வெளி நடவடிக்கைகள் வெறும் பொதுமக்களால் மட்டும் அன்று, சிற்சில சமயங்களில் வானியலாளர்களாலும் கண்டுகொள்ளப் பட்டுள்ளன. அத்தகைய நிகழ்ச்சிகளில், அந்தக் காட்சிகளின் உண்மையை, ஏற்கனவே அறிந்துள்ள இயற்கைக் காரணங்களைக் கொண்டு விளக்க முடியாது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, அரெண்ட் ரோலண்டு வால்மீன் தொடர்பான நிகழ்ச்சி ஒன்று. அவ் விண்மீன் இரட்டைவால் கொண்ட விண்மீன் ஆகும். அதனுடைய ஒரு வால் நீண்ட புகை போன்றது. அது கதிரவனை நோக்கித் திரும்பியிருந்தது; ஆனால், அது தோன்றியது; உடனே, திடீரென்று முற்றிலும் மறைந்து விட்டது. அது, ஒரு பீறிடு வானூர்தி (Jet Plane) இயந்திரத்தை ஒருவர் இயக்கி வைத்துப் பின்னர் உடனே நிறுத்தி விட்டதைப் போல் தோன்றியது. ஆனால், உண்மையில் அதைக் காட்டிலும் அதிகமான புலனம் அதில் அடங்கியிருந்தது;

பொதுவான அந்தக் குறிப்பிட்ட வால்மீனின் வால், வழக்கத்திற்கு மாறான வாலைக் கொண்டிருந்ததாகக் கண்டறிப்பட்டுள்ளது. அறிவியலாளர் கண்ட அந்த வால்மீனின் வாலின் தன்மை, கண்டறிந்த பிற வால்மீனின் தன்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது, இவர்கள் அறிந்த அந்த வால்மீனின் வால் துகள்களின் வேக ஓட்டம் நொடிக்கு 3000 மாத்திரிகளுக்கு(மீட்டர் களுக்கு) அதிகமாக இருந்தது என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது. இத்தகு வேகத்திற்கு ஒரு பீறிடு வானூர்தியின் இயந்திரமே ஈடு கொடுக்க வேண்டியதாக உள்ளது. இந்தக் கதை இத்துடன்

முடிந்து விடவில்லை. இப்படி முரணாகவும் புதிராகவும் உள்ள வாலின் தன்மைகள் தவிர, அந்த வால்மீனின் தலையிலிருந்து பெருமளவு தொலைவுக்கு அதன் வாலில் இருந்த வானொலி அலைகளையும் அமெரிக்க வானியலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அந்த வால்மீனின்று வெளியேறிய கதிர் வீச்சின் நிலைக்களம் கதிரவனின் திசையில் நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு மாதத்திற்குப் பின்னர், பெல்சியத்தில் இருந்த வானவியலாளர்கள் அந்த வால்மீனிலிருந்து மற்றொரு வானொலி அலையின் ஒலிக்குறிப்பை வேறொரு அலைவரிசையில் பதிவு செய்தனர். அதனுடைய தீவிரத் தன்மை நாள்தோறும் அதிகமாகிக் குறுகிய ஒளிக்கற்றையை உடைய இரண்டாவது வால் தோன்றுவதற்கு முன்னால் உச்ச நிலையை அடைந்தது. (தொடரும்)

ஓர் உருவகம்!

'காவிரி' மாறிவிட்டான்!

காவிரி அவன் பெயர். பெண்ணுக்குத்தான் காவிரி என்று பெயர் வைப்பார்கள். இவனுக்கு ஒரு பெண்ணின் பெயரா? ஓ. இல்லை. காவிரி ஆற்றின் பெயர் ஏன்? இலெனின், 'லேனா' என்ற ஆற்றின் பெயரைத்தானே தமக்குப் புனை பெயராக்கிக் கொண்டிருந்தார்! காவிரிக்கும் 'இலெனினுக்கும்' தொடர்பு உண்டு. ஏனெனில், அவன் கையில் 'அரசும் புரட்சியும்', 'அரசு' போன்ற நூல்கள் எப்போதும் இருக்கும். சிவப்புச் சிந்தனை உடைய காவிரி, எப்போதும் கங்கை'யைப் பற்றித்தான் நினைத்திருப்பான். அல்லது 'வால்கா' அவன் பேச்சில் வரும் சீனத்தின் 'மஞ்சள் ஆறு' அவன் மனத்தில் நிற்கும்!

இப்போதெல்லாம் அவன் "மாறிவிட்டான். காவிரிக் கரையைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறான். இந்த அறிவு முன்பு ஏன் வரவில்லை? நம் கண்ணோட்டமே பிழையாகி விட்டதை இப்போது தான் 'புரிந்து கொண்டேன்' என்பான் காவிரி!

காவிரி கொஞ்சம் கரடுமுரடானவன். அடிபிடி என்றால் முன்னால் போய், அமைதியை நிலைநாட்டுவான். தேவைப்பட்டால் அடிகொடுத்துத் திமிர்பிடித்தவனுக்குப் பாடம் புகட்டுவான். அவன் 'வெள்ளைச் சட்டை'களைப் புரட்டி அடிப்பான். அழுக்கு வேட்டிகளை ஆதரவாக நின்று காப்பான்.

இப்போது அவன் மாற்றம் கண்டு, பழைய 'நண்பர்கள்" விலகிப் போகிறார்கள்! அவனோ, உண்மையை ஓங்கிப் பேச நினைக்கிறான். தொண்டையில்-எதிரில் உள்ள ஏமாற்றுக்காரர்களின் உண்மை நிலை உருட்டுக் கல்லாகத் தடை செய்கிறது.

நம் மக்களை நம்மினமே சுரண்டுகிறதை... எதிர்ப்பதில் தயக்கமேன்? 'இல்லை' எதிர்க்கிறான்... உண்மை எதிரியின் கையாளாகிவிட்ட உள்ளூர் எதிரிகள் திணறிட...!.

—பறம்பை அறிவன்

இளைஞர்க்குச் சில அன்புரைகள்!

இரவூல் போல்ரவ, பிரான்சு.

- சிறிய உள்ளங்களை ஒளியுடையதாக ஆக்குங்கள். உங்கள் மக்களினத்துக்காக எப்பொழுதும் சாவதற்குக்கூட அஞ்சாமல் இருங்கள்; உங்கள் கற்பனையெல்லாம் உலகை நோக்கியதாக இருக்கட்டும். உலக நன்மைக்காக அன்பு கொண்டு போராட அணியமாக இருங்கள்;
- உங்களுக்குப் பசியெடுக்கும் பொழுது, 'நான் பசியாக இருக்கிறேன்' என்று சொல்லாதீர்கள். அப்பொழுது இவ்வுலகில் உள்ளவர்களுள் ஏறத்தாழ 40 கோடி இளைஞர்கள் நாள் முழுவதும் சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லாமல் பட்டினி கிடப்பதைச் சிந்தியுங்கள். உலகில் பாதிக்கு மேற்பட்ட இளைஞர்கள் பெரும்பாலும் பசியும் பட்டினியுமாகவே இருப்பதை எண்ணிப் பாருங்கள்!
- உங்களுக்குச் சளிபிடித்துத் தொல்லைப்படும் பொழுது, அதைப் பெரிதாக எண்ணிக் கவலைப் படாதீர்கள். இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் ஏறத்தாழ 80 கோடிப் பேர்கள் இன்னும் ஒரு மருத்துவரைக் கூடப் பார்க்காதவர்களாக இருந்து, தங்கள் உடல் நலனைப் பேணிக் கொள்ள முடியாதவர்களாக இருப்பதை அப்போது எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- எப்பொழுதாவது நீங்கள் கண்ணீர் விட்டு வருந்துகிற நிலையை அடைந்தால், அந்த நிலைக்காகத் துயரப்படாதீர்கள். ஏனெனில் அந்த நிலை விரைவில் மாறக் கூடியது என்று நம்புங்கள்.
- எப்பொழுதும் விழிப்பாயிருங்கள்! உங்களைச் சுற்றிலும் உள்ள உலகத்தவர்களில் பெரும்பகுதியினர் எப்பொழுதுமே தொல்லையும் துயரமுமாகவே வாழ்ந்து கொண்டிருப்பதை எண்ணிப் பாருங்கள்; அந்த நிலையில் நீங்கள் ஒய்வு கொள்ளுவதைக்கூட நினையாமல் உழைத்துக் கொண்டே இருங்கள்.
- மகிழ்ச்சியடைகின்ற பொழுது, நீங்கள் மட்டும் தனியாக அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடாதீர்கள். அண்டை அயலில் உள்ளவர்களையும் உங்கள் மகிழ்ச்சியில் இணைத்துக் கொள்ளுங்கள்.
- எப்பொழுதும் ஏழ்மைக்கும், ஞாயமற்றதற்கும் உடன்பட்டுக் கோழையாக இருக்காதீர்கள்; அவற்றுடன் உடன்பாடு செய்து கொள்ளவேண்டாம். கொள்கையில் பின் வாங்கி விடவும் வேண்டாம். அவற்றோடு போராடுங்கள்; சண்டையிடுங்கள்!
- உண்மைக்காகவும், நேர்மைக்காகவும், மக்களுக்கு நன்மை செய்யும் கொள்கைகளுக்காகவும், உங்கள் இன மக்களுக்காகவும் எப்பொழுதும் போராடுங்கள். உடன்பாடு பேசாதீர்கள். அவர்களை நிமிர்ந்து நோக்குங்கள். முகத்துக்கு முகம் நோக்கித் திட்டவட்டமாகவும், வலிவாகவும், தெளிவாகவும் உங்கள் கருத்துகளை எடுத்துக் கூறுங்கள். அவர்களின் சூழ்ச்சிக்கு இலக்காகாமல் எச்சரிக்கையாக இருங்கள். எப்பொழுதும் நீங்களாகவே இருங்கள். கொள்கையை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள், நெகிழ்ச்சி வேண்டாம். வெற்றியடைவீர்கள்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

தாய்நாடு! தாய்நாடு!

ஓர் அரசன் வேற்று நாட்டில் பயணம் செய்கையில் நறுமணம் வீசும் அழகிய தோட்டம் ஒன்றை அடைந்தான்; அவன் காதுக்கு எட்டியது ஒரு பாட்டு. அவ்வளவு மென்மையும் இனிமையும் கொண்ட பாட்டை அதற்கு முன் அவன் கேட்டதே இல்லை; அந்தத் தோட்டத்தில் இரவைக் கழிக்கலாம் என்றும், பாடகனைத் தேடிக் கொண்டு வரும்படியும் அரசன் ஏவலர்களுக்கு உத்தரவிட்டான்; அழகில்லாத சாம்பல் நிறப்பறவைதான் அந்தப் பாட்டைப் பாடியது எனத் தெரிய வந்தது; அதைப் பிடிக்கச் செய்து, மகிழ்ச்சி அடைந்து, தன் நாட்டு அரண்மனைக்கு அப்பறவையுடன் திரும்பினான்.

அது பொன் கூண்டில் அடைக்கப்பட்டது. ஆயினும் அது பாடவே இல்லை; வாய் திறவாமல் இருந்தது. அப்போது அரசன் எல்லா அமைச்சர்களையும் கூட்டினான். வேற்று நாட்டில் தன் இனிய குரலால் பாடி மகிழ்வித்த இந்தப் பறவை, சிறைப்பட்ட பின் விடாப்பிடியாக வாய் திறவாதிருப்பதைக் கூறி, அதைப் பாட வைப்பதற்கு வழி என்னவென்று அவர்களின் கருத்தினைக் கேட்டான்; அன்றில் ''தாய்நாடு!'' ''தாய்நாடு!'' என்ற ஒரே சொல்லை மறுபடி மறுபடி கிசுகிசுக்கிறது என்று எல்லாரிலும் கூர்மதி படைத்த அமைச்சன் கூறினான். அரசன் இதைக் கேட்டு வியப்படைந்தான்: 'தாய் நாடா? இந்தப் பறவையின் தாய்நாடு என் நாட்டை விட மேலானதா? இங்குள்ள பொன் கூண்டு இதற்குப் பிடிக்கவில்லை என்றால், இதன் நாட்டில் இதன் கூடு மணிக்கற்களால் (இரத்தினங்களால்) இழைத்ததாக இருக்குமோ? அன்றிலின் காலில் மெல்லிய நூலைக் கட்டும்படி அரசன் உத்தரவிட்டான்; பறவை கூண்டிலிருந்து வெளியே விடப்பட்டது; பரிவாரங்கள் புடைசூழ, நூலின் மறுமுனையைக் கையில் பிடித்தபடி அன்றிலைத் தொடர்ந்தான்: கால்நடையாகவும் ஊர்திகளிலும் நீண்ட பாதையைக் கடந்தார்கள் அவர்கள். திடீரென்று அன்றில் ஒரு முட்செடி மேல் உட்கார்ந்தது: அங்கே தான் அதன் கூடு இருந்தது: நூல் துண்டிக்கப்பட்டது; விடுதலை அடைந்த அன்றில் தனக்கே இயல்பான மிடுக்குடன் உயரிய இசையை இசைத்தது. கல்நெஞ்சனான அரசன் கூட அந்தப் பாட்டிற்கு உருகிக் கண்ணீர் சிந்தினான்; பறவையின் விடுதலை உணர்வை மகிழ்ந்தவாறே அதை அங்கேயே விட்டுவிட்டு அரசன் தன் தாய்நாட்டுக்குத் திரும்பினான். -குழந்தை ஈகவரசன்

(அடிப்படை நூல்:-'மண்கட்டியைக் காற்று அடித்துப்போகாது'- எனும் புதினத்தில் வந்த அவாரிய மொழிக் கதை.)

(3-ஆம் பக்கம் தொடர்ச்சி)

- பழைய பழக்க வழக்கங்கள் உடைய குமுகாய அமைப்பை உடைத்தெறியுங்கள்: மாற்றி அமையுங்கள்: ஒரு குழந்தை தன் பழைய விளையாட்டுப் பொம்மைகளைத் தூக்கியெறிந்து விட்டு, அல்லது உடைத்தெறிந்து விட்டுப் புது பொம்மைகளை விரும்புவது போல! முதிர்ச்சியடையாதவர்களிடமிருந்து நீங்கள் வளர்ந்து நிற்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.
- உங்களின் இளமை படைப்பதற்கும், வடிவமைப்பதற்கும்; முன்னேறுவதற்கும், தொண்டு செய்வதற்கும், அதனால் மகிழ்வை உருவாக்குவதற்கும் பயன்படட்டும்!

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)